**மீரிகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீரிகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மீரிகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 49,850 செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீரிகம புகையிரத நிலையத்திற்கு அருகில் வணிக தொகுதியொன்றில் கடைகளுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பெற வேண்டிய | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணம் ரூபா 46,591,800 பெற வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்த நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 144,270 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நன்கொடையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அதற்குரிய பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 14,427 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்த ரூபா 65,615 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மூலதன மானியமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பணம் செலுத்தப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 3,785,927 ஆன 05 செயற்திட்டங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | 03 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் நிதி மீளளிப்புச் செய்யப்படாத கூட்டுப்பெறுமதி ரூபா 17,186,847 ஆன 214 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வேலைக் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கடன்பட்டோர் மற்றும் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கடன்கொடுததோர் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2022 சனவரி 04 ஆந் திகதிய LGD/10A/நகி/2021 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி நிலையான சொத்து கணிப்பிடும் போது ரூபா 5,000 இனை விட குறைவான மீள் மதிப்பீடு / கொள்வனவு விலையில் உள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கி வருடாந்த மெய்மையாய்வுகளில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அந்த செலவினங்கள் அந்த ஆண்டின் வருமான செலவினமாக கருத வேண்டியிருந்த போதிலும் நிலையான சொத்தாக இனங்காணப்பட்ட பெறுமதி கணக்குகளில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமை தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் பிரதேச சபையின் கூட்டுப்பெறுமதி ரூபா 213,900 அவ்வாறான 83 விடயங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி மற்றும் திரண்ட நிதிய மீதி என்பன அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலப்பகுப்பாய்வு அறிக்கையின் படி, வேலைக்கடன்பட்டோர் மீதி ரூபா 69,840,302 ஆக காணப்பட்டது. இதில் 1 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மத்திய அரசாங்கத்தின் 290 செயற்திட்டங்களுக்காக ரூபா 22,353,012 தொகை மற்றும் மாகாண சபைகளின் 28 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,557,599 தொகையும், 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மத்திய அரசாங்கத்தின் 43 செயற்திட்டங்களுக்காக ரூபா 4,706,807 தொகை மற்றும் 5 இற்கும் 10 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் நிலுவையாக காணப்படுகின்ற மத்திய அரசாங்கத்தின் 42 செயற்திட்டங்களில் ரூபா 5,039,397 தொகையும் 2022 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதன் போது மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்க வேண்டிய சகல பணத்தின் 10 வீத நிறுத்தி வைத்தலாகும். மாகாண சபையின் கீழ் கிடைக்க வேண்டிய அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழான 10 சதவீத நிறுத்தி வைத்தல் பணமாகும். நிறுத்தி வைத்தல் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதி மீளளிப்பு செய்யப்பட்டதன் பின்னர் கடன்பட்டோரை விடுவிக்க முடியும். | வேலைக் கடன்பட்டோர் பட்டோலையை பகுப்பாய்வு செய்து பொருத்தமான முறைமை யொன்றை ஈடுபடுத்துதல் மற்றும் கோவைகளை பரீட்சித்து அறவிட வேண்டியவையாக குறித்துரைக்கப் பட்ட வேலைக் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையில் ரூபா 280,296 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் ரூபா 3,730,340 கூட்டுத்தொகையான 03 கணக்கு மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ரூபா 10,340 தொகையை பதிவழிப்பதற்கு அனுப்பப்பட்ட போதிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. ரூபா 2,143,000 தொகையை பதிவேடுகளில் கணக்கு மீதிகளில் சரி செய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | பட்டோலைகள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 7,961,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 65,540,331 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனவரி அலகுகள் 4,926 இற்குரிய ரூபா 8,388,063 ஆன ஆதனவரி நிலுவை மீதியில் 518 அலகுகளுக்குரிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 3,442,048 தொகையும், 438 அலகுகளுக்குரிய 5 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 1,027,396 தொகையும், 622 அலகுகளுக்குரிய 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 1,106,851 தொகையும், 1,834 அலகுகளுக்குரிய 1 இற்கும் | கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் அலுவலக நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை, சரியான திட்ட முறைமையை பின்பற்றுவதற்கு முடியாதிருந்தமையால் நிலுவை ஆதனவரியை சேகரிப்பதற்கு வசதியீனமான நிலைமை ஏற்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது ஆகக்கூடிய நிலுவை ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதனவரி மீதியை பகுப்பாய்வு செய்து பொருத்தமான திட்ட முறைமை யொன்றை பின்பற்றுவதற்கோ அல்லது அறவிடுவதற்கோ அறவிடுதலை புறக்கணித்த தரப்பினரை இனங்கண்டு நிலுவை மீதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 03 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 1,857,345 தொகையும் மற்றும் 1,514 அலகுகளுக்குரிய ஒரு வருடத்திற்கு குறைவான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 954,423 தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக ஏற்பட்டிருந்த எதிர்ப்பினால் கீனதெனிய கண்டலம வீதி ஆதனவரி இலக்கம் 102/02 என்ற ஆதனத்திற்காக ரூபா 217,052 தொகை 02 வருட காலம் முதல் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அது தொடர்பாக குழுவொன்று நியமித்து உரிய பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.2 குத்தகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீரிகம உப அலுவலகத்திற்குரிய கிடைக்க வேண்டிய வாடகை (கேள்விக் கடை வாடகை) வருமானம் ரூபா 1,140,834 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அதில் ரூபா 842,334 தொகை 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் நிலுவையாக காணப்படுகின்ற மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 1-3 வருடங்களுக்கு இடையிலான நிலுவை மீதி காணப்பட்ட வாடகையாளர்களுக்கு நிலுவைப் பணத்தை செலுத்துமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2019.11.30 இல் நிதிக்குழுவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகை பட்டோலையை பகுப்பாய்வு செய்து பொருத்தமான திட்ட முறைமை யொன்றை ஈடுபடுத்தி கடை உரிமையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது வாடகையை செலுத்துதலை புறக்கணித்த பொறுப்பு வாய்ந்த தரப்பினரை தீர்மானித்து அவர்களிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப உரிமையாளர் மரணமடைந்தமை அல்லது வெளிநாடு சென்றமை, உப வாடகைக்கு மாற்றப்படாமை, முற்பணம் செலுத்தி பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்களினால் 03 வருட காலம் முதல் மீரிகம உப அலுவலகத்தில் உடன்படிக்கையின் 85 கடைகள் காணப்பட்டதுடன் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 35 கடைகள் புகையிரத நிலைய வணிக தொகுதியின் கடைகளாகும். முற்பணம் செலுத்தி பூர்த்தி செய்யப்படாமையினால் உடன்படிக்கை செய்யப்படவில்லை. முற்பணங்களின் ஒரு பகுதியை பதிவழிப்பதற்காக குழுவொன்று நியமித்து அந்த பரிந்துரை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 05 உப வாடகையிலிருந்து மாற்றுதல் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதி 45 கடைகள் தொடர்பாக பொதுக்கூட்டத்திற்கு அனுப்பப்பட்டு தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை யின்றி கடைகளை உரிமையாளர் களிடமிருந்து உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலக்கம் 25/2014 என்ற அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் படி நிரந்தரமாக்கிய 56 ஊழியர்களின் எண்ணிக்கை முகாமைத்துவ சேவைகள் | 2021 ஆம் ஆண்டில் நிரந்தர ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்காக நிதியத்திலிருந்து | இலக்கம் 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை மேற்கொள்ளாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போது அந்த ஊழியர்களுக்காக பெறமுடியுமாகவிருந்த ரூபா 2,634,737 சம்பளம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டதுடன் பின்னர் மீளளிப்புச் செய்யப்படுகின்றது. எனினும் 25/2014 சுற்றறிக்கையின் படி நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களின் சம்பளத் தொகை முழுமையாக மீளளிப்புச் செய்யப்படுவதில்லை. இதனால் நிலுவை மீளளிப்பு காணப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் அவ்வாறு நிலுவை மீளளிப்பு காணப்பட்டதுடன் அது உள்ளூராட்சி திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் பதிவழிக்கப்படுகின்றது. | தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்து ஊழியர்களின் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கும், சம்பளத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் 557 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையும் தீர்வு 266 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | பொதுமக்கள் முறைப்பாடுகளில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் மரங்கள் தொடர்பாகவே இருந்தது. அதில் அனேகமான அளவிற்கு மூன்றாவது மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்டிருந்ததுடன் தற்போது வரையில் நிதியேற்பாடு பற்றாக்குறையாக காணப்படுகின்றமையால் நிதிக்குழுவின் ஊடாக நிதியேற்பாட்டினை ஒதுக்கி மரங்களினை வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பொதுமக்கள் முறைப்பாடுகள் மிகவும் விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையில் ஈடுபட்டிருந்த செயலாளர் 2019 நவம்பர் 30 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்றதன் நிரந்தர செயலாளர் ஒருவர் நியமிக்காமல் அத்திகதி முதல் பதிற்கடமை செயலாளர் ஒருவர் | வெற்றிடங்கள், காலாண்டு அறிக்கை மூலம் ஆண்டின் ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு தடவை உள்ளூராட்சி திணைக்களத்திற்கும், பிரதம செயலாளர் அலுவலகத்திற்கும் மற்றும் | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருந்தார். | உள்ளூராட்சி அமைச்சிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ஊழியர் கடன் மீதி ரூபா 365,762 ஆக இருந்ததுடன் இதில் சேவையை விட்டுச் சென்ற 04 வருடங்களுக்கு மேற்பட்ட ஒரு ஊழியரின் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட பெறுமதி ரூபா 131,853 ஆகும். | ஒரு ஊழியரிடமிருந்து நிலுவைப் பணம் அமைய நாட்கூலி சேவைக் காலத்திற்குரிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து விசாரணை செய்து செலுத்தி பூர்த்தி செய்யுமாறு கூறப்பட்டிருந்தது. ஒரு ஊழியரிடமிருந்து நிலுவைப் பணத்தை பிணையாளரிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகின்றமையும் அறியத் தருகின்றோம். | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 16 பொதுக் காணிகள் 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் காணிகளில் 06 காணிகளின் பெறுமதியும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை இனங்காணாத 06 காணிகளுக்காக பெறுமதிகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சபைக்கு கையளிக்கப்படாத 16 பொதுக் காணிகளை கூடிய விரைவில் கையேற்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | கையேற்கப்படாத பொதுக் காணிகளை கையேற்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |